படிப்பின் சாராம்சம் - வருவது மற்றும் செல்வது

இன்று முரளிதரர் (ஞான புல்லாங்குழலை வாசிப்பவர்) தந்தை தனது மாஸ்டர் முரளிதராக இருக்கும் குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளும் முரளி மற்றும் சந்திப்பை சந்திக்க காத்திருக்கும் சாதக பறவைகள். அதுபோன்ற சாதக பிராமண ஆத்மாக்களை தவிர வேறு யாரும் கிடையாது. இந்த ஞான முரளியும் பரமாத்மாவின் சந்திப்பு விடுபட்டதாகவும் அன்பானதாகவும் இருக்கும். உலகத்திலுள்ள அநேக ஆத்மாக் களை பரமாத்மாவை சந்திப்பதற்கான தாகத்தில் இருக்கிறார்கள். எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் உலகத்தின் ஏதோ மூலையில் இருந்துக் கொண்டு, மறைமுகமாக தனது சிரேஷ்ட பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் தெய்வீக தந்தையை தெரிந்துக்கொள்வதற்காக அதாவது பார்ப்பதற்காக தெய்வீக புத்தி மற்றும் தெய்வீக பார்வை வேண்டும், அதை பாபா விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுக்கு கொடுத்திருக்கிறார். ஆகையால் பிராமணர்களாகிய நீங்கள் தெரிந்துக் கொள்ள முடியும். மேலும் சந்திப்பை கொண்டாட முடியும். உலகத்தினர் கூக்குரலிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள் - நாங்கள் துளிக்காக தாகத்தோடு இருக்கிறோம். மேலும் நீங்கள் சொல்கிறீர்கள் நாங்கள் அதிகாரியாக இருக்கிறோம். எந்தளவு வித்தியாசம் இருக்கிறது. தாகத்தோடு (உலகத்தினர்) இருப்பவர்கள் எங்கே?, அதிகாரிகள் (பாபாவின் குழந்தைகளாகிய நாம்) எங்கே? இப்பொழுது அனைவருமே அதிகாரி ஆகி அதிகாரியிடம் வந்து சேர்ந்துள்ளீர்கள். நாம் நம்முடைய பாபாவின் வீட்டிற்கு அதாவது நம்முடைய வீட்டிற்கு வந்திருக்கிறோம் என்ற நஷா மனதில் இருக்க வேண்டும். நாம் ஆஸரமத்திற்கு வந்திருக்கிறோம் அப்படி அல்ல. நம்முடைய வீட்டிற்கு வந்திருக்கிறோம் என்று புரிந்திருக்கிறீர்கள் அல்லவா? அதிகாரத் தன்மையின் அடையாளம் - தன்னுடையது என்ற உணர்வு. நம்முடைய தந்தையிடம் வந்திருக்கிறோம். தன்னுடைய குடும்பத்திற்கு வந்திருக்கிறோம். விருந்தாளி ஆக வரவில்லை, ஆனால் குழந்தை கள் வந்திருக்கிறார்கள் தன்னுடைய வீட்டிற்கு. நான்கு நாட்களுக்காக தான் வருந்திருக் கலாம், ஆனால் மதுபனாகிய தன்னுடைய வீட்டை அடைந்துள்ளீர்கள் என்று புரிந்திருக்கிறீர்கள். எனவே வருவது மற்றும் செல்வது. பிராமணர் களாகிய நீங்கள் என்ன படிக்கிறீர்களோ, முரளிதரன் என்ன முரளியை (புல்லாங்குழலை) வாசிக்கிறாரோ அதனுடைய சாரம்சம் இந்த இரு வார்த்தைகள் தான் - வருவது மற்றும் செல்வது. நினைவினுடைய பயிற்சி என்ன செய்கிறீர்கள்? கர்மயோகி என்றாலே - நான் ஆத்மா அசரீரி சரீரத்தின் பந்தனத்திலிருந்து விடுபட்டு இருக்கிறேன். காரியம் செய்வதற்காக செயலில் வருகிறேன். மேலும் செயல் செய்து முடித்த பிறகு கர்ம சம்மந்தத்திலிருந்து விடுபட்டு இருக்கிறேன். சம்மந்தத்தில் இருக்கிறேன். பந்தனத்தில் (கட்டுண்டு) இல்லை. எனவே என்ன ஆனது? காரியம் செய்வதற்காக வர வேண்டும், வந்த பிறகு விடுபட்டு செல்ல வேண்டும். கர்ம பந்தனத்திற்கு வசப்பட்டு செயலில் வர மாட்டார்கள். ஆனால் கர்மேந்திரியங்களை கட்டுப்படுத்தி அதிகாரத்தோடு காரியம் செய் வதற்காக

கர்மயோகியாக இருக்கிறார்கள். இந்திரியங்களை கர்மத்திற்கு வசப்படுத்தாதீர்கள். யாராவது மற்றவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வருகிறார்கள் என்றால் கட்டுண்ட ஆத்மா அடங்கி போய்விடுகிறது. அதிகாரியாக இருக்கும் ஆத்மா எப்படிப்பட்ட ஆத்மாவிற்கும் அடிமை யாவதில்லை தனது சுயமரியாதையில் உறுதியாக இருக்கிறார்கள். பல குழந்தைகள் இப்பொழுதும் கூட எப்பொழுதாவது ஏதாவதொரு கர்மேந்திரியத்திற்கு அடிமையாகி விடு கிறார்கள். பிறகு சொல்கிறார்கள் - இன்று கண் ஏமாற்றிவிட்டது. இன்று வாய் (வார்த்தைகள்) ஏமாற்றிவிட்டது. பார்வை ஏமாற்றி விட்டது. மற்றவர்களுக்கு வசப்படுவது என்றாலே ஏமாற்றம் அடைவது அதாவது ஏமாற்றத்திற்கான அடையாளம் - துக்கத்தை அனுபவம் செய்வது. மேலும் ஏமாற்றம் அடைய விடும்புவதில்லை, ஆனால் விரும்பவில்லை என்றாலும் செய்து விடுகிறோம், இதைத் தான் வசப்படுவது என்று சொல்லப்படுகிறது. உலகத்தினர் சொல்கிறார்கள் - வலையில் மாட்ட விரும்பவில்லை, ஆனால் எப்படி வலையில் மாட்டிக் கொண்டோம் என்று தெரியவில்லை. சுயதர்ஷன சக்கரதாரி ஆத்மா எந்தவொரு ஏமாற்றம் தரக்கூடிய வலையில் மாட்டிக் கொள்ள முடியாது. ஏனெனில் சுயதர்ஷன சக்கரம், பலரை வலையிலிருந்து விடுவிக்கக் கூடியதாகும். தன்னை மட்டுமல்லாமல், மற்றவர்களையும் விடுவிப்பதற்கு நிமித்தம் ஆக்குகிறது. பலவிதமான துக்கம் என்ற வலையிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக சிந்தனை செய்கிறீர்கள் - இந்த உலகம் என்ற சக்கரத் திலிருந்து விடுபடவேண்டும்...... ஆனால் உலகம் என்ற சக்கரத்திற்குள் (நாடகத் திலில்) நடித்துக் கொண்டிருந்தாலும் பலவிதமான துக்கத்தின் வலையிலிருந்து விடுபட்டு இருந்தால், ஜீவன் முக்தி (வாழ்க்கையிலிருந்து விடுப்பட்டு இருப்பது) நிலையை அடைய முடியும் - இது யாருக்கும் தெரியாது. நாங்கள் உங்களுக்கு வாழ்க்கையில் இரட்டை முக்தி வழங்க முடியும் என்று சவால் விட்டு சொல்ல முடியும். - வாழ்க்கை வாழவும் செய்யலாம், விடுபட்டும் இருக்கலாம், அவ்வாறு சவால் விட்டு இருக்கிறீர்கள் அல்லவா? ஜீவன் முக்தி என்பது உங்களுக் கும் எங்களுக்கும் பிறப்புரிமையாக இருக்கிறது என்று மகிழ்ச்சியாக கூறுகிறீர்கள். எனவே சுயதர்ஷன சக்கரதாரி என்றாலே துக்கத்தின் வலைகளிலிருந்து விடுப்பட்டு இருக்கக் கூடிய வராகவும் விடுவிக்கக் கூடியவராகவும் இருக்கிறீர்கள். அதற்கு (துக்கத்திற்கு) வசப் படுபவர்கள் கிடையாது. ஆனால் அதிகாரி ஆகி, எஜமானராக இருந்து அனைத்து கர்மேந்திரி யத்தின் மூலம் காரியங்கள் செய்ய கூடியவர்கள். ஏமாற்றம் அடைபவர் கள் கிடையாது. ஆனால் மற்றவர் களையும் கூட ஏமாற்றத்திலிருந்து விடுவிக்கக்கூடியவர்கள். இந்த பயிற்சி செய்கிறீர்கள் அல்லவா - காரியத்தில் வரவேண்டும், பிறகு விடுபட்டு இருக்க வேண்டும். எனவே நினை வினுடைய பயிற்சி என்னவாக இருக்கிறது? வருவதும் செல்வதும் ஆகும்.

மேலும் படிப்பு என்றாலே ஞானத்தின் சாராம்சம் என்னவாக இருக்கிறது? கர்மாதீத் (கர்மத்தின் எந்த தாக்கமற்ற) ஆகி வீட்டிற்கு செல்ல வேண்டும். அதன் பிறகு இராஜ்யம் செய்வதற்கான நடிப்பை நடிப்பதற்காக தன்னுடைய இராஜ்யத்தில் வரவேண்டும்., இது தான் ஞானத்தின் சாராம்சமாக இருக்கிறதல்லவா. எனவே செல்வது மற்றும் வருவது - இது தான் ஞானம் மற்றும் யோகம் (நினைவு) இருக்கிறது. இந்த பயிற்சியில் இரவும் பகலும் ஈடுபட்டிருக்கிறீர்கள். புத்தியில் வீட்டிற்கு செல்வதற்கான மற்றும் அதன் பிறகு

இராஜ்யத்தில் வருவதற்கான குஷி இருக்கிறது. மதுபன் தனது வீட்டிற்கு வருகிறீர் என்றால் எந்தளவு குஷி ஏற்படுகிறது. டிக்கெட் முன் பதிவு செய்வதிலிருந்து செல்ல வேண்டும், மதுபன் செல்ல வேண்டும், - இது புத்தியில் நினைவு இருக்கிறதல்லவா. மதுபன் வீட்டிற்கு செல்வதற்கான குஷி இருக்கிறது என்றால் ஆத்மாவின் வீட்டிற்கு செல்வதற்கான குஷியும் இருக்கிறது. ஆனால் குஷியினால் யார் வருவார்? எந்தளவு சதா இந்த வருவது மற்றும் செல்வதற்கான பயிற்சி இருக்கும். விரும்பும் பொழுது அசரீரி ஸ்திதியில் (மனநிலையில்) நிலைத்திருங்கள் மற்றும் விரும்பும் பொழுது கர்மயோகி ஆகுங்கள் - இந்த பயிற்சியை மிகவும் உறுதியாக இருக்க வேண்டும். நீங்கள் அசரீரி ஆக விரும்பும் பொழுது, சரீரத்தின் பந்தனம், கர்மத்தின் பந்தனம், மனிதர்களின் (தேகதாரிகள்) பந்தனம், பொருட்களின் பந்தனம், சுபாவம் - சம்ஸ்காரத்தின் பந்த்னம் தனது பக்கம் கவர்ந்திழுக்கிறது என்பது போல் அல்ல. எந்தவிதமான பந்தனமும் அசரீரி ஆவதற்கு விடுவதில்லை. யாராவது இறுக்கமாக (டைட்டாக) ஆடை அணிந்திருந்தால் சமயத்தில் ஒரு வினாடியில் நீக்க விரும்பும் பொழுது நீக்க முடியாது. உடலோடு ஒட்டிருக் கிறது, அதனால் சரீரத்லிருந்து விலக்க முடிவதில்லை. அதுபோல எந்தவொரு பந்தனத்தின் ஈர்ப்பு தனது பக்கம் ஈர்க்கிறது. பந்தனம் ஆத்மாவை இறுகப் பற்றிக்கொள்கிறது. ஆகையால் பாப்தாதா சதா இந்த பாடத்தை கற்பிக்கிறார் - நிர்லேப் (எதுவும் ஒட்டாத) என்றாலே விடுபட்டவராகவும் இருப்பது மற்றும் மிக அன்பானவராக இருப்பதாகும். இதற்கு நெடுங்கால பயிற்சி தேவைப்படுகிறது.

ஞானத்தை சொல்வது - கேட்பது, சேவை செய்வது இது தனிப்பட்டதாகும். ஆனால் இந்த பயிற்சி மிகவும் அவசியமானது, பாஸ்வித் ஆனர் (தகுதியுடன் தேர்ச்சி பெறுதல்) ஆக வேண்டுமென்றால் இந்த பயிற்சியில் தேர்ச்சி பெறுவது மிக அவசியமாகும். மேலும் இந்த பயிற்சி மீது கவனம் கொடுப்பதில் இரட்டை அடிக்கோடு (டபுல் அண்டர்லைன்) போட வேண்டும். அப்பொழுது தான் டபுல் லைட் ஆகி கர்மாதீத் நிலையை அடைந்து டபுல் கீரிடதாரி ஆகலாம். பிராமணர்களாக ஆகிவிட்டீர்கள், பாபாவின் அஸ்திக்கு அதிகாரியாகவும் ஆகி விட்டீர்கள், இறை மாணவர்களாகவும் ஆனீர்கள், ஞானம் நிறைந்த ஆத்மாவாக ஆகிவிட்டீர்கள், விஷ்வ சேவாதாரியாக இருக்கிறீர்கள், இந்த பாக்கியத்தை அடைந்து விட்டீர்கள், ஆனால் இப்பொழுது பாஸ் வித் ஆனர் (தகுதியுடன் தேர்ச்சி பெறுதல்) ஆவதற்காக, கர்மாதீத் நிலையை அருகாமையில் கொண்டு வருவதற்காக, பிரம்மா பாபாவிற்கு சமமாக விடுபட்ட அசரீரி ஆவதற்கான பயிற்சியின் மீது விசேஷ அன்பில் லயித்திருக்கும் நிலையை (லவ்லின் ஸ்திதி) அனுபவம் செய்யுங்கள் கவனம் அளியுங்கள். பிரம்மா பாபா சாகார (உலகிய) வாழ்க்கையில் கர்மாதீத் நிலையை அடைவதற்கு முன்னால் விடுபட்டவராகவும், அன்பானவராகவும் இருப்பதற்கான பயிற்சியை நேரடியாக அனுபவம் செய்ய வைத்தார், அதை அனைத்து குழந்தை களும் அனுபவம் சொல்கிறார்கள், - கேட்டுக் கொண்டே விடுபட்டவராகவும், காரியங்கள் செய்துக் கொண்டிருந்தாலும் விடுபட்டவராகவும், பேசிக்கொண்டிருந்தாலும் விடுப்பட்டு இருந்தார். சேவையையோ அல்லது மற்ற காரியத்தையோ விட்டு விடவில்லை. ஆனால் விடுப்பட்டிருந்தார், இறுதி மூச்சுவரை குழந்தைகளின் சேவையை நிறைவேற்றினார். விடுபட்டவராக இருந்து, ஒவ்வொரு செயலிலும் வெற்றியை அனுபவம் செய்ய வைத்தார். முயற்சி செய்து பாருங்கள், ஒரு மணி நேரம் மற்றவர்களுக்கு புரிய வைக்கும் பொழுது முயற்சி செய்து பாருங்கள்,

அதற்கு இடையில் 15 நிமிடங்கள் சொல்லிக் கொண்டே, பேசிக்கொண்டே விடுபட்டு இருப்பதற்கான நிலையில் நிலைத்திருந்து மற்ற ஆத்மாக்களுக்கும் கூட விடுபட்டு இருப்பதற்கான மன நிலையை உருவாக்குவதற்கான அதிர்வலைகளை கொடுங்கள். 15 நிமிடத்திற்கு வெற்றி பெற்றுவிடுகிறீர்கள் என்றால் 1 மணி நேரத்திற்கு செய்து பார்க்க முடியாத என்ன.? இதைத்தான் பிரம்மா பாபா செய்துக் காட்டினார். எனவே என்ன செய்ய வேண்டும்.

முதலில் நிமித்த சகோதரிகள் இருக்கிறார்கள். தந்தையை (ஃபலோ ஃபாதர்) பின்பற்ற வேண்டுமல்லவா. சேவையை எவ்வளவு தான் அதிகரியுங்கள். ஆனால் விரிவாக்கம் செய்யும் பொழுது சாராம்சமான (ஒடுங்கும்) மன நிலைக்கான பயிற்சியை குறைந்து விடக் கூடாது. விரிவாக்கத்தில் சாராம்சம் மறந்துவிடக்கூடாது. உண்ணுங்கள், அருந்துங்கள், சேவை செய்யுங்கள், ஆனால் விடுபட்டத்தன்மை மறந்துவிடக்கூடாது. வார்த்தைகள் மூலம் எதுவரை சேவை செய்வீர்கள், எத்தனை பேருக்கு செய்வீர்கள். இப்பொழுது ஆன்மீக வைப்ரேஷன், அசரீரி மனநிலையின் வைப்ரேஷன், விடுபட்ட நிலை மற்றும் அன்பான நிலையின் சக்திசாலியான வைப்ரேஷன் சூழ்நிலையில் பரப்புங்கள். சேவையின் தீவிரகதிக்கான (அதிவேகம்) சாதனம் இது தான். மற்றவர்களுக்கு சேவை செய்வதற்கு பதிலாக தன்னிடத்தில் இந்த விதியில் முழுவதுமாக இருக்கும் பொழுது வெற்றியை அடைய முடியும். இப்பொழுது சப்தத்தில் (வார்த்தைகள்) வருவது மிக எளிதாக இருக்கிறது, மனதளவிலும் செய்கிறீர்கள். ஏனெனில் பயிற்சி உறுதியாகி விட்டது. அதுபோல இந்த பயிற்சியும் இயல்பானதாக ஆகிவிடும். இந்த பயிற்சியை இயல்பாக மாற்றி விடுங்கள். மனித ஆத்மாக்களின் இயல்பு அல்லது இயற்கையாக இருக்கலாம். புரிந்ததா? கடினமக தோன்றவில்லை அல்லவா. பெரியதிலும் பெரிய தந்தையின் குழந்தைகளாக இருக்கிறீர்கள், மிகப்பெரிய பிராப்தியின் அதிகாரியாக இருக்கிறீர்கள். எனவே அவர்களுக்கு பெரிய விஷயமில்லை. கவனம் வைக்க வருகிறதா, இல்லை டென்சனில் இருந்து விடுகிறீர்களா? உண்மையான சம்ஸ்காரம் கவனம் வைப்பதாக இருக்கிறது. டென்சனில் வருகிறீர்கள் என்றால் கவனம் வைப்பது ஒன்றும் பெரிய விஷயமி ல்லை. டென்சனில் இருப்பது பழக்கமாகிவிட்டது அல்லவா. கவனம் வைக்க வேண்டுமென்ற டென்சனில் இருக்காதீர்கள். ஆனால் இயல்பான கவனம் வைக்க வேண்டும். பலர் அப்படியும் செய்கிறார்கள் - கவனத்தை டென்சனில் மாற்றிவிடாதீர்கள். கவனமாக இருப்பதை கவனமாக செய்யுங்கள், மாற்றிவிடாதீர்கள். உண்மையான பயிற்சி என்பது ஆத்மா விடுப்பட்டு இருப்பது. விடுப்பட்டு தான் இருந்தோம், விடுபட்டு இருக்கிறோம், மீண்டும் விடுபட்டவராக ஆகிறீர்கள். பற்றுதல் விடுபட்டவர் ஆவதற்கு விடுவதில்லை. ஆத்மாவின் உண்மையான இயல்பு சரீரத்திலிருந்து விடுபட்டு இருப்பது, தனித்து இருப்பது. இந்த உடல் என்பது ஆத்மா அல்ல, ஆத்மா என்பது உடல் அல்ல. எனவே விடுப்பட்டவராக இருக்கிறீர்கள் அல்லவா. 63 பிறவி களின் பற்றுதலின் பழக்கம் ஆகிவிட்டது. உண்மை (அசல்) உண்மை தான். நல்லது.

டபுல் விதேஷி (இரட்டை அயல்நாட்டினர்) அதிகமானோர் வந்து சேர்ந்துள்ளனர். - புது வருடத்தை கொண்டாடு வதற்காக. விருந்தாளியாக வந்திருக்கிறீர்களா அல்லது குழந்தையாக வந்திருக்கிறீர்களா? தன்னுடைய வீடு என்று தோன்றுகிறதல்லவா. பாப்தாதாவும் குழந்தைகளை தன்னுடைய வீட்டில்

பார்த்து புன்முறுவல் செய்கிறார். குழந்தைகள் எப்பொழுதுமே வீட்டிற்கு அலங்காரமாக இருக்கிறார்கள். குழந்தைகளினால் மதுபன் அலங்கரிக்கப்படுகிறது. ஆகையால் பாப்தாதா தனது வீட்டின் அலங்காரத்தை (குழந்தைகளை) பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். பாரதவாசிகளாக இருந்தாலும், அயல்நாட்டினராக இருந்தாலும் - இருவருமே வீட்டின் அலங்காரங்களாக (அழகு) இருக்கிறார்கள். பாப்தாதா (குழந்தைகள்) வருவதற்காகவும் வாழ்த்துக்களை தெரிவிக்கிறார். செல்வதற்கும் வாழ்த்துக்களை தெரிவிக்கிறார். இங்கு வருவதும் நன்றாக இருக்கிறது, செல்வதும் நன்றாக இருக்கிறது. பிரிவு கிடையாது, வாழ்த்துக் கள் வாழ்த்துக்கள். செல்வது என்பது சேவைக்காக வாழ்த்துக்கள். இங்கு வருவது என்பது சந்திப்பதற்கான வாழ்த்துக்கள். இரண்டிற்கும் வாழ்த்துக்கள். நல்லது.

உள்நாடு மற்றும் வெளிநாட்டை சேர்ந்த அனைத்து எப்பொழுதும் அதிகாரியான குழந்தை களுக்கும், சதா ஞானம் மற்றும் நினைவின் சாரம்சத்தில் இருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக் களுக்கு, சதா வருவது மற்றும் செல்வது இந்த நினைவின் மூலம் நிறைந்தவர் ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா பிரம்மா பாபாவை பின்பற்றக்கூடிய கர்மாதீத் நிலையை நெருக்கத்தில் சென்றடையக்கூடிய யோகி ஆத்மாக்களுக்கு, சதா தன்னுடைய வீடு என்ற அனுபவத்தையும் அதிகாரத்தின் குஷியில் இருக்கக்கூடிய அதிர்ஷ்டசாலி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

மருத்துவர்களுக்காக அவ்யக்த மகாவாக்கியங்கள்: அனைத்து மருத்துவர்களின் மனதில் என்ன இருக்கிறது? மருத்துவமனை இல்லை தானே? பாபாவை மனதில் அமரவைப்பது என்றாலே சதா காலத்திற்கு பலரை மன்னிக்க வேண்டும். இன்றைய காலத்தில் மருத்துவர்கள் சொல்கிறார்கள் - ஆசீர்வாதங்கள் வேலை செய்யுமளவிற்கு மருந்தும் கூட அந்தளவு வேலை செய்வது கிடையாது, அவர்களும் கூட மருந்துகளால் மனமுடைந்து போய்விட்டனர், ஏனெனில் இவர்களுடைய (நோயாளிகள்) ரிசல்ட் என்னவாக இருக்கும் என்ன ஆகும் என்பதை தெரிந்து வைத்துள்ளார்கள். ஆகையால் இப்பொழுது அனைவருடைய பார்வையும் ஆசீர்வாதங்களின் பக்கம் செல்கிறது. இப்பொழுது யோகத்தின் பயிற்சிக நாலாபக்கமும் அதிகரித்துக் கொண்டிருக் கிறது. இதுவரை யோகம் வரை வந்திருக் கிறீர்கள். சகஜயோகம் வரை வந்துவிடுவார்கள். மருந்துகள் உண்பதற்கு பதிலாக மற்ற பக்கத்திலும் புத்தி செல்கிறதல்லவா. போகப்போக சரியான வழிக்கு வந்துவிடுவார் என்றால் மருத்துவர்கள் இந்த வேலையை செய்கிறீர்கள் அல்லவா. அனைவருடைய புத்தியை சரி செய்பவர் யார்? நன்றாக இருக்கிறது, தைரியம் வைப்பதினால் பாபாவின் உதவி தானாகவே கிடைத்துக் கொண்டிருக்கிறது. கிடைக்கவும் செய்யும். தைரியம் இருக்குமிடத்தில் அசம்பவமும் (முடியாததும்) சம்பவம் ஆகிவிடும். அனை வரும் முடியாததை முடித்து காட்டுபவர்கள். மனதை ஒருமுகப்படுத்துவது கடினம், அசம்பவம் என்று உலகத்தினர் கூறுகிறார்கள். ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? உங்களுக்கு நொடி யினுடைய விஷயமல்லவா. பாபா சொல்கிறார் - மனம் ஒருமுகப்பட்டு விடுகிறது. எனவே உங்களுக்கு நொடி யினுடைய வேலையாக இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு அசம்பவமாக இருக்கிறது. எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. நேரம் எடுப்பதில்லை தானே? - பாடல் ஒலித்தது, (பாபாவின் லைட்) இருந்தால் தான்

மனம் ஒருமுகப்படுகிறது? - அப்படி இல்லை தானே. முயற்சி செய்ய வேண்டியிருக்கிறதா? நம்முடைய தந்தையாக இருக்கிறார் அல்லவா. அவர் வேறு எந்த அப்பாவும் இல்லை அல்லவா. தன்னுடைய தந்தையாக இல்லை, வேறு யாரோருவரின் தந்தையை நினைவு செய்ய சொன்னால் செய்ய முடியாதல்லவா. ஆனால் இவர் நம்முடைய தந்தையாக இருக்கிறார். தன்னை சேர்ந்தவர்களை நினைவு செய்ய கடினமில்லை தானே? மற்றவர்களை நினைவு செய்வது தான் கடினமாகும் அல்லவா. நீங்கள் உரிமையோடு நினைவு செய்கிறீர்களா அல்லது பகவானாக இருக்கிறார், மிகவும் பெரியவராக இருக்கிறார், சூரியனுக்கு சமமானவராக இருக்கிறார் - அப்படி நினைத்து நினைவு செய்கிறீர் களா? அனைத்தும் என்னுடையது - இந்த உரிமையோடு நினைவு செய்யுங்கள்.

ஆன்மீக ரோஜா ஆகி முழு நாளும் நறுமணத்தை பரப்புங்கள். நறுமணம் அப்படிப்பட்ட பொருளாக இருக்கிறது - அது மிக தொலைவில் உள்ளவர்களையும் கவரக்கூடியது. வெகு தொலைவிலிருந்தே யோசிப்பார்கள் - இந்த நறுமணம் எங்கிருந்து வந்துக் கொண்டிருக்கிறது. எனவே உங்களுடைய ஆன்மீகத்தன்மை உலகத்தை கவர்ச்சிக்க செய்யும். பாருங்கள், ஆன்மீகத் தன்மையின் நறுமணம் உள்நாடு மற்றும் வெளிநாடு கவர்ந்திழுக்க செய்கிறதல்லவா. வெளிநாடு வரை நறுமணம் சென்றடைகிறது அல்லவா. எந்த வேலை செய்தாலும் நல்ல எண்ணத்தோடு இந்த நறுமணத்தை பரப்புங்கள். எந்த காரியம் செய்தாலும் புத்தி எந்த பக்கம் செல்கிறது என்று சோதனை செய்யுங்கள்? விரும்ப வில்லையென்றாலும் கூட பல பக்கம் செல்கிறது. ஒரு பக்கமாக செல்வதில்லை. எனவே மற்ற பக்கங்களில் செல்கிறது என்றால் சேவையின் பக்கமும் கூட செல்ல முடியுமல்லவா. நினைவும் செய்ய முடியும். சில சமயங்களில் மட்டும் தான் முழு புத்தியை காரியத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட காரியம் சிலருக்கு தான் இருக்கும் - மருத்துவர்கள் ஆப்ரேஷன் செய்கிறார்கள், ஆப்ரேஷன் செய்யும் பொழுது தான் தேவைப்படுகிறதே தவிர, மருந்து சீட்டு எழுதி தருகிறார்கள், மேற்பார்வை செய்யும் பொழுது, புத்தி மற்ற விஷயங்களிலும் ஈடுபடுகிறது. அவ்வாறு அங்கு செய்யும் பொழுது இங்கு ஏன் செய்ய முடியாதா என்ன? மனம் மற்றும் புத்திக்கு சுற்றி சுற்று பழக்கமாகிவிட்டது. ஞானத்தை சிந்தனை செய்வதில் சுற்றி வந்தாலும், வீணான விஷயங்களில் சுற்றி வந்தாலும், அவசியம் சுற்றி சுற்றி வருகிறது. நீங்கள் சுயதர்ஷன சக்கரம் சுற்றி வந்தீர்கள் என்றால் மயக்கம் தெளிந்து விடும்.

அனைவரும் சேவையில் சகயோகியாக இருக்கிறீர்களா? யாருக்கும் அதுபோல நேரம் இருக்கிறதோ, சூழ்நிலை அமைந்திருக்கிறதோ - அவர்கள் கைகளை உயர்த்துங்கள். மனதின் சேவையை அனைவரும் செய்ய முடியும் அல்லவா.? பிஸியாக இருப்பதற்கு சேவை மிக நல்ல சாதனமாக இருக்கிறது. தன்னை எந்தளவு பிஸியாக வைத்துக் கொள்கிறீர்களோ, அந்தளவு பாதுகாப்பாக இருக்கலாம். மனதின் மூலம் சேவை செய்யுங்கள், வார்த்தை களினால் சேவை செய்யுங்கள், காரியங்கள் மூலம் சேவை செய்யுங்கள், ஆனால் அவசியம் புத்தி பிஸியாக இருக்க வேண்டும். தனக்கான தினசரி பதிவேடு (டைம் டேபிள்) உருவாக்குங்கள். பெரிய மனிதர்களாக ஆக ஆக அந்தளவு டைம் டேபிளும் (திட்டமிட்டு செயல்படுவார்கள்) இருக்கும். நீங்கள் பெரியதிலும் பெரிய

மனிதர்களாக இருக்கிறீர்கள்., பிராமணர்களை விட பெரியவர்கள் முழு கல்பத்திலும் சென்று யாரென்று தேடி வாருங்கள்? தேவதைகள் கூட கிடையாது. நீங்கள் தான் தேவதை ஆகிறீர்கள், ஆனால் உங்களுக்கு வாழ்க்கைக்கு (பிராமணர் களுக்கு) முன்னால் அது ஒன்றுமே இல்லை. வாழ்க்கை என்றாலே பிராமண வாழ்க்கைத் தான் மிக உயர்ந்தது. நல்லது.

வரதானம் : அவ்யக்த பாலனையின் மூலம் சக்திசாலியாகி இறுதியில் வந்தாலும் வேகமாக செல்லக்கூடிய முதல் நம்பரின் உரிமையாளர் ஆகுக

அவ்யக்த பாலனையில் வரக்கூடிய ஆத்மாக்களை முயற்சியில் மிக வேகமாக (தீவிரகதியில்) செல்வதற்கான அதிர்ஷ்டம் மிக எளிதாக கிடைத்திருக்கிறது. இந்த அவ்யக்த பாலனை எளிதாகவே சக்திசாலி ஆக்கக் கூடியது, ஆகையால் எந்தளவு முன்னேற வேண்டுமோ முன்னேற முடியும். இந்த நேரத்தில் இறுதியில் வந்தாலும் வேகமாகவும், வேகமாக செல்பவர் கள் முதலாவதாக வருவதற்கான வரதானம் கிடைத்திருக்கிறது. எனவே இந்த வரதானத்தை காரியத்தில் பயன்படுத்துங்கள், அதாவது நேரத்திற்கு தகுந்தபடி வரதானத்தை சொரூபத்தில் கொண்டு வாருங்கள். என்ன கிடைத்திருக்கிறதோ அதை பயன்படுத்துங்கள். முதல் நம்பரில் வருவதற்கான உரிமையை அடைந்து விடுவீர்கள்.

சுலோகன்: சுயமரியாதை என்ற சீட்டில் அமர்ந்துவிட்டால், அனைவருடைய மரியாதையும் தானாகவே கிடைத்துவிடும்.

அன்பில் லயித்திருக்கும் நிலையை (லவ்லின் ஸ்திதி) அனுபவம் செய்யுங்கள்.

-பாபாவிடம் உண்மையான அன்பு இருக்கிறது என்றால் அன்பினுடைய அடையாளம் - சமமானவர், கர்மாதீத் ஆகுங்கள். செய்விப்பவர் என்ற நிலையில் இருந்து காரியம் செய்யுங்கள். செய்ய வையுங்கள். கர்மேந்திரியங்கள் உங்களை வேலை செய்ய வைக்க கூடாது. ஆனால் நீங்கள் கர்மேந்திரிங்கள் மூலம் காரியம் செய்ய வையுங்கள். ஒருபொழுதும் மனம் - புத்தி -சம்ஸ்காரத்திற்கு அடிமை ஆகி எந்தவொரு செயலையும் செய்யாதீர்கள்.